முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்

முன்னிலை: திரு.எஸ்.ஜவகர், பி.எல்.,

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி , கடலூர்.

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அமர்வு வழக்கு எண்.257/2019-ல்**

**குற்றவியல் பல்வகை மனு எண்.1098/2023**

நவீன் த/பெ. விஜய் ஆனந்த் .. மனுதாரர்/3 ம் எதிரி

எதிர்

காவல் ஆய்வாளர்,
முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையம்,
குற்ற எண்.222/2018 .. எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இம்மனு 28.08.2023 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.பி.பக்கிரி அவர்களும் ஆஜராகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, கு.வி.மு.ச. பிரிவு 311-ன் கீழ், அமர்வு வழக்கு எண்.257/2019-ல் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைத்து உத்தரவிட கோரி, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

இந்த வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் ஏற்கெனவே அ.சா.1 முதல் அ.சா.8 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அனைவரும் அனைத்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞராலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த மனுதாரர்/3 ம் எதிரி அவருக்காக தனியாக புதிய வழக்கறிஞரை நியமித்துள்ளார். எனவே, சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில், சம்பவத்தின் உண்மை நிலையையும், இந்த மனுதாரர்/3 ம் எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்பதையும் நிரூபிக்க அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க வேண்டியது அவசியமாகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் முக்கிய சாட்சிகள் என்பதாலும், வழக்கின் நியாயமான முடிவிற்காகவும் மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மனுதாரர் மேற்படி சாட்சிகளுக்கு விசாரணை தேதியில் சாட்சி படி செலுத்திவிடுவதாகவும் உறுதி கூறுகிறார். மனு அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்று பிராத்திக்கிறார்.

3. **எதிருரையின் சுருக்கம் :**

கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்ய புதிய வழக்கறிஞரை நியமித்துள்ளதாக கூறுவது ஒரு நியாயமான காரணம் அல்ல. வழக்கு

நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடனும், விடுபட்டதை பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். எனவே, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

5. **<u>தீர்வு :</u>**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் 22.03.2022 அன்று விசாரணை செய்யப்பட்டு, அன்றைய தேதியிலேயே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இருந்தபோதிலும், மனுதாரர் தன் மனுவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை மீண்டும் அழைத்து மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு, to establish that the real manner of incident என்று காரணம் தெரிவித்துள்ளார். இந்த வழக்கானது 2019 ம் ஆண்டிலிருந்து இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ஒரு வருட காலம் ஆகியும் மனுதாரர் மீண்டும் விசாரிக்க எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல், தற்சமயம் ஏற்னெவே குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கோரியிருப்பது

ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை ஏற்கெனவே இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பின்னர், போதுமான காரணங்கள் இன்றி மேற்படி சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டுமென்று கோரியிருப்பது, சாட்சிகளுக்கு மிகுந்த சிரமத்தையும், கஷ்டத்தையும் கொடுக்கக் கூடிய ஒன்று ஆகும். மேலும், மனுதாரர் புதிதாக வழக்கறிஞரை நியமித்திருப்பதாக கூறியிருப்பது, மேற்படி சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரிப்பதற்கு போதுமான ஒரு முகாந்திரம் அல்ல. எனவே, இந்த மனுவை அனுமதிக்க போதுமான முகாந்திரங்கள் இல்லை என்று முடிவு கண்டு, மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடிக்குரியது என்றும் தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வுக் காணப்படுகிறது.

6. முடிவில், இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.09.19 18:26:05 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ,

கடலூர்.

Draft/Fair Order
Crl.M.P.No.1098/2023 in
S.C.No.257/2019
Dt. 19.09.2023.